(முற்பகல் 9–50)

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி சத்தியமங்கலம் தொகுதியில் ஆய்வில் உள்ள பாசனத்திட்டங்கள் எத்தனை என்று கேட்டிருக்கிறேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவை வைத் தலைவர் அவர்களே, ஆறு திட்டங்கள் என்பதை பதிலில் தெரிவித்து இருக்கிறேன்.

மதுராந்தகம் பெரிய ஏரியின் வலப்புறக் கால்வாய் அமைக்கும் திட்டம்.

533—(*வினா எண் 21732) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் பெரிய ஏரியில் வலப்புறக் கால்வாய் அமைக்கும் பணி எப்பொழுது துவக்கப்படும்?

(ஆ) இத் திட்டம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மதுராந்தகம் பெரிய ஏரியின் வலப்புறக் கால்வாய் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் பெரிய ஏரியில் வலப்புறக்கால்வாய் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதற்கு எத்தனை லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வுகள் செய்யப்பட இருக்கின்றன. எத்தனை ஏரிகள் இதனால் அதிகமாக பாசன வசதிகள் பெறும் என்பது பற்றி ஆய்வு ஏதாவது நடத்தப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் மதுராந்தகத்தை சுற்றியுள்ள 31 ஏரிகளுக்கு பாசனம் அளிக்க இந்தக் கால்வாய் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த 31 ஏரிகள் உட்பட 522 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெறும். அத்துடன் 1,180 ஏக்கர் நிலம் இரண்டாம் போகம் பாசன வசதி பெறும் என்று இங்கே எனக்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் உள்ளது. இந்தத் திட்டம் விரிவான திருத்திய மதிப்பீட்டுக்காக தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1984 மார்ச் 31]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுமா ? அதுபோல் மதுராந்தகம் பெரிய ஏரியில் தூர் வாருவதற்கு ஏற்கனவே ஆய்வுகள் செய்யப்பட்டதா ? அந்தத் திட்டம் எப்போது செயலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஏரியில் தூர் வாருவது பற்றி இங்கே என்னிடம் தற்போது எந்த குறிப்புகளும் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற போது 31 ஏரிக்கு இந்தக் கால்வாய் தண்ணீர் கொண்டு பயன் பெறும் என்றும் சுமார் 1,000 ஏக்கர் நிலம் பயன்பெறும் என்றும் சொன்னார்கள். இவ்வளவு சொன்னபோது எவ்வளவு ரூபாய் அந்தத் திட்டத்திற்கு ஆய்வுக்கு ஒதுக்கினார்கள் ? எவ்வளவு எஸ்ட்டிமேட் என்று சொன்னார்கள் ? இயற்கை சூழ்நிலையினால் திடீர் என்று மழை பெய்தால் இந்த 31 ஏரிகளிலும் தண்ணீரை தேக்கி வைத்துக்கொள்ள வசதியாக இருக்கும். ஆகவே இதை உடனடியாக எடுத்துக்கொள்ள அரசு முன்னுரிமைக் கொடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டம் போடுகின்ற நேரத்தில் அந்தத் திட்டத்தினால் எந்த எந்த பகுதிகள் பயன்பெறும். அதனால் அந்தப் பகுதியில் எவ்வளவு தூரத்திற்கு பாசன வசதி கிடைக்கும் என்பதை பற்றி ஆரம்ப கட்ட ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் தான் இங்கே விடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. விரிவான ஆய்வுக்குப் பிறகுதான் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் தேவை போன்ற விவரங்கள் எல்லாம் தெரியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரின் கீழ் இயங்கும் கயிறு வாரியத்திடமிருந்து 1982-83 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு கிடைத்த தொகை.

534—(* வினா எண். 17065)—திரு. டி. மணி : மாண்புமிகு கைத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சர்க்காரின் கீழ் இயங்கும் கயர் போர்டி லிருந்து (Coir Board) 1982-83 ஆம் ஆண்டில் சுமார் 13 கோடி ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தமிழகத்திற்குக் கிடைத்த பங்கு என்ன ?